www.Padasalai.Net www.CBSEtips.in



பதிவெண் :

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2022

மதிப்பெண்கள் : 90

**12–ம் வகுப்பு** **பொருளியல்**

நேரம் : 3.00 மணி

## பகுதி - அ

20x1 = 20

I. சரியானவிடையைத்தேர்ந்தெடுத்துஎழுதவும்;

1. பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை அ. சொத்து மற்றும் நலமும் ஆ. உற்பத்தி மற்றும் நுகர்வு இ. தேவையும் மற்றும் அளிப்பும் ஈ. நுண்ணியல் மற்றும் பேரியல்
2. பொதுவான விலையின் தொடர் உயர்வை குறிப்பிடும் கருத்து ________ ஆகும். அ. மொத்தவிலைக் குறியீடு ஆ. வாணிபச்சுழல் இ. பணவீக்கம் ஈ. தேசியவருவாய்
3. கீழ்வருவனவற்றுள் ஓட்ட மாறிலியை கண்டுபிடி. அ. பணஅளிப்பு ஆ. சொத்துக்கள் இ. வருவாய் ஈ. வெளிநாட்டுச் செலாவணி இருப்பு
4. கீழேகொடுக்கப்பட்டுள்ள வற்றில் எதுமிகப்பெரிய எண்ணாக இருக்கும்? அ. செலவிடக்கூடிய வருமானம் ஆ. தனி நபர் வருமானம் இ. NNP ஈ. GNP
5. மிக அதிக அளவிலான தேசிய வருவாய் ________ லிருந்து வருகிறது. அ. தனியார்துறை ஆ. உள்துறை இ. பொதுத்துறை ஈ. எதுவும்இல்லை
6. வேலை வாய்ப்பு பற்றி தொன்மை கோட்பாட்டின் மையக்கருத்து என்பது ________ அ. குறைந்து செல்விளைவு விதி ஆ. தேவைவிதி இ. அங்காடிவிதி ஈ. நுகர்வுவிதி
7. தொகுத் தேவையின் கூறு ________ ஆகும். அ. தனிநபர் தேவை ஆ. அரசுச்செலவு இ. ஏற்றுமதிமட்டும் ஈ. இறக்குமதிமட்டும்
8. தொன்மைக் கோட்பாட்டின்படி, வட்டி வீதம் ________ க்கான வெகுமதி அ. முதலீடு ஆ. தேவை இ. மூலதனம் ஈ. சேமிப்பு
9. வருவாய் உயர்ந்தால், நுகர்வு அ. குறையும் ஆ. மாறாது இ. ஏறிஇறங்கும் ஈ. உயரும்
10. கீன்ஸின் கருத்துப்படி, முதலீடு MEC ஐயும் ________சார்ந்தது. அ. தேவையையும் ஆ. அளிப்பையும் இ. வருவாயையும் ஈ. வட்டிவீதத்தையும்
11. காகிதப்பண முறையை மேலாண்மை செய்வது அ. மையபணவியல் அமைப்பு ஆ. மாநிலஅரசு இ. மைய அரசு ஈ. வங்கிகள்
12. MV என்பது அ. பணத்தேவை ஆ. சட்டபூர்வபணஅளிப்பு இ. வங்கிப்பண அளிப்பு ஈ. மொத்தபண அளிப்பு
13. பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை ________ அழைக்கின்றோம். அ. பூரிப்பு ஆ. பின்னிறக்கம் இ. மீட்சி ஈ. வணிகச்சுழற்சி
14. வங்கிக்கடன் என்பது எதைக்குறிக்கிறது? அ. கடன்பணம் ஆ. முன்பணம் இ. கடன் பணம் மற்றும் முன்பணம் ஈ. கடன்பெறுதல்
15. நெறிமுறை தூண்டல்என்பது அ. உத்தமநிலைப்படுத்தல் ஆ. உச்சநிலைப்படுத்தல் இ. தூண்டுதல்நடவடிக்கை ஈ. குறைவுநிலைப்படுத்துதல்
16. பணமாற்றுவீதம்நிர்ணயமாகும்சந்தை அ. பணசந்தைஆ.அந்நியசெலாவணி இ. பங்குசந்தை ஈ. மூலதனசந்தை
17. அயல்நாட்டுச்செலுத்துநிலைகூறுகள்கீழ்கண்டவைகளில்எவை அ. நடப்புகணக்கு ஆ. மையவங்கிஇருப்பு இ. மூலதனகணக்கு ஈ. அ , ஆ, இ , மூன்றும்
18. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாததுறை ? அ. வங்கி ஆ. அணுஆற்றல் இ. மருந்துஉற்பத்தி ஈ. காப்பீடு
19. சிறப்பு எடுப்பு உரிமையின் மற்றொரு பெயர் அ. தாள்தங்கம் ஆ. பங்களவுகள்



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



இ. தன்விருப்பஏற்றுமதிதடைகள் ஈ. இவை ஏதுமில்லை

20. ஆசியான் அமைப்பின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்

அ. ஜகார்த்தா ஆ. புதுடெல்லி இ. கொழும்பு ஈ. டோக்கியோ

## பகுதி- ஆ

II. எவையேனும் ஏழு வினாக்களுக்க விடையளிக்கவும். வினாஎண் 30 -க்குகட்டாயமாக விடையளிக்கவும். 7x2=14

21. பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.
22. முதலாளித்துவம் என்றால் என்ன?
23. தனிநபர் வருமானம் என்றால் என்ன?
24. 'விளைவுத் தேவை ' என்றால் என்ன?
25. 'நுகர்வு நாட்டம் ' என்றால் என்ன?
26. பண்டமாற்று என்றால் என்ன?
27. கடன் உருவாக்கம் என்றால் என்ன?
28. செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன?
29. தடையற்ற வாணிகப்பகுதி என்றால் என்ன?
30. இறுதிநிலை சேமிப்பு நாட்டம் (MPS) - வரையறு

## பகுதி - இ

III. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 -க்குகட்டாயமாக விடையளிக்கவும் 7x3=21

31. பொருளாதார அமைப்புகளிகன் வகைகளை குறிப்பிடுக.
32. தேசிய வருவாயின் பயன்களைப் பட்டியலிடுக.
33. தொகு தேவை என்றால் என்ன? அதன் கூறுகளைக் கூறுக.
34. தொன்மையியத்தையும் கீன்ஸியத்தையும் ஒப்பிடுக. ( ஏதேனும் ஐந்து)
35. கீன்ஸின் நுகர்வு சார்ந்த உளவியல் விதியின் கருத்துகளைக் கூறுக.
36. மீள் பணவீக்கம் பற்றி விளக்குக?
37. பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.
38. இறக்கு மதி பங்களவு என்றால் என்ன ?
39. பலதரப்பு ஒப்பந்தம் என்றால் என்ன?
40. பண வீக்கத்தின் வகைகள் பற்றி எழுதுக.

## பகுதி- ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x5=35

41. (அ) பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி. (அல்லது)
(ஆ) முதலாளித்துவம் ,சமத்துவம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.
42. (அ) தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விளக்குக. (அல்லது)
(ஆ) தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள் யாவை ?
43. (அ) சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க. (அல்லது)
(ஆ) ADF மற்றும் ASF க்கு இடையிலான சமநிலையைவரை படம் மூலம் விவரி.
44. (அ) நுகர்வுச்சார்பின்அகமற்றும்புறக்காரணிகளைவிளக்குக. (அல்லது)
(ஆ) மூலதனத்தின் இறுதி நிலை உற்பத்தித்திறனுக்கும் முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தித் திறனுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
45. (அ) பணத்தின் பணிகளை விளக்குக. (அல்லது)
(ஆ) வணிகச் சுழற்ச்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.
46. (அ) வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக. (அல்லது)
(ஆ) இந்தியரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.
47. (அ) உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்குமிடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும். (அல்லது) (ஆ) குறிப்பு எழுதுக அ) சார்க் ஆ) ப்ரிக்ஸ்

**********************

வகுப்பு : 12 பொருளியல்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593